1993 ஏப்ரல் 12]

அந்தப் பிரச்சினையே இல்லாமல் போய்விட்டது. இப்போது வந்து இருக்கின்ற எல்லா விண்ணப்பங்களையும்—அதிலே ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்து போட்டு இருக்கின்றனர்—எல்லாவற்றையும் சேர்த்து இரண்டு அல்லது மூன்று மாத காலத்தில் புதிய அட்டைகள் வழங்கப்பட்டுவிடும்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தேனி பன்னீர் செல்வம்.

திரு. தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் சில இடங்களில் பிப்ரவரி மாதம் 28-ஆம் தேதி கெடு முடிந்ததற்கு பிறகு விசாரணைக்கு வர வேண்டிய அதிகாரிகள் விசாரணைக்கு வராமல் இருக்கிறார்கள். இப்படி காலதாமதம் செய்வதால் உண்மையில் யார் யாருக்கு கார்டு இல்லையென்பதைக் கண்டுபிடிப்பதில் சிரமம் ஏற்படும் என்பதை உணர்ந்து, இதிலே துரிதமாக நடவடிக்கையெடுக்க அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்ச் மாதத்தில் வட்டவாரியாகவும், கிராம வாரியாகவும் அந்த அப்ளிகேஷன்களை மனுக்களைப் பிரித்து எடுத்து, அதற்கு பிறகு ஒவ்வொரு கிராமமாகச் செல்ல வேண்டுமென்று உத்தரவிட்டு இருக்கிறோம். கிராமப்புறங்களில் அது கொஞ்சம் வேகமாக முடிந்து இருக்கிறது. நகர்ப்புறங்களில் பிரச்சினை இருந்தது. ஆனாலும் மார்ச் மாதத்தில் வேலையை முடித்து விட்டு, ஏப்ரல் மாதத்தில் இப்போது ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அட்டைகள் வழங்கப்பட்டு விடும். ஏற்கனவே, 50,000 அட்டைகளுக்கு மேலே வழங்கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 313, திரு. கே.ஏ. மனோகரன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

313—

மாவட்ட மத்தியக்கூட்டுறவு வங்கிகள் மூலம் வீட்டு வசதிக் கடன் வழங்கல்.

*12093—திரு. கே. ஏ. மனோகரன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) எல்லா மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் வீட்டுவசதிக் கடன் வழங்குவதாக அறிவித்திருந்தும் தருமபுரி மாவட்டத்தில் இதுவரை ஒரு கடன் மனுக்கூட அனுமதிக்கப்பட்டதில்லை என்பதனை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தர்மபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் மனுக்கள் வந்திருந்தும் வீட்டு வசதி கடன் வழங்கப் படவில்லை என்பது அரசுக்கு தெரியும். அதற்குக் காரணம் அந்த வங்கி, தேசிய வீட்டு வசதி வங்கி அளிக்கும் மறு நிதியினைப் பெறத் தகுதி பெறவில்லை என்பதுதான் காரணமாகும்.

திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்பு பல்வேறு முறைகளில் விளம்பரங்கள் செய்யப்பட்டு, அந்த வங்கியில் கடன் கிடைக்கும் என்ற முறையில் பல்வேறு நபர்கள் மனுக்களை அனுப்பி, இன்றைக்கு வேறு இடங்களில் கடன் பெற முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே, தர்மபுரி மாவட்டத்தில் சிறப்பு கவனம் செலுத்தி தேசிய வங்கியின் மூலமாக கடன் பெற இந்த அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய கூட்டுறவு வங்கி வீட்டு வசதிக் கடனை வழங்க வேண்டுமென்றால் தனது சொந்த நிதியை ஈடுபடுத்தக் கூடாது என்பது கட்டளையாகும். மேலும், ரிசர்வ் வங்கியிலிருந்தும், தேசிய வீட்டு வசதி வங்கியிலிருந்தும் அவர்கள் மறு நிதியினைப் பெற முடியும். அப்படி பெறுவதற்காக அவர்கள் கண்டிஷன்களைப் போட்டிருக்கிறார்கள். தேசிய வீட்டு வசதி வங்கி, மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு மறுநிதி வழங்க மொத்த கேட்பில் குறைந்தபட்சம் 40 சதவீதமாவது அது கடந்த மூன்று ஆண்டுகளில் வசூல் செய்திருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும். அந்த நிபந்தனைக்கு தர்மபுரி மத்திய கூட்டுறவு வங்கி தகுதி பெறமுடியாத நிலைமை வந்துவிட்டது. 1988-89-ஆம் ஆண்டில் 43.36 சதவீதமும். 1989-90-ஆம் ஆண்டில் 25.83 சதவீதமும், 1990-91-ஆம் ஆண்டில் 29.79 சதவீதமும் மட்டுமே வசூல் செய்துள்ளது. எனவே, மேற்படி குறியீடாகிய 40 சதவீதம் அளவுக்கு வசூல் செய்யாத காரணத்தால், தேசிய வீட்டு வசதி வங்கியினுடைய மறுநிதியைப் பெற இயலாமல் போய் விட்டது. ஆனால் தற்போது இந்த 40 சதவீதத்தை

எட்டுவதற்காக எல்லா நடவடிக்கைகளும் எடுத்து வசூல் செய்து கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தில் வீட்டு வசதிக் கடனை வழங்குவதற்குண்டான வசதியை தர்மபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி பெறும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுவரையில் அந்த மத்திய வங்கியில் பணிபுரியும் பணியாளர்களுக்காவது வங்கியின் சொந்த நிதியிலிருந்து வீட்டு வசதி கடன் கொடுக்க அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி பொதுமக்களுக்கு கடன் கொடுப்பதைப் பற்றியதாகும். பொது மக்களுக்கு கடன் கொடுப்பதற்கு வேறு வழிமுறைகள் இருக்கின்றன. அதைச் செய்து கொண்டிருக்கிறோம். ஊழியர்களைப் பொறுத்தவரையில் மற்ற வங்கிகளில் என்னென்ன வசதிகள் இருக்கின்றனவோ அதைக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கையெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 314—டாக்டர் அ. ஸ்ரீதரன் இருக்கையில் இல்லை.

வினா எண் 315— திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

315—

இரசாயன உரத்தைப் பழைய விலைக்கு வாங்க சிறுவிவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கல்.

*13495— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:

இரசாயன உரத்தை பழைய விலைக்கே வாங்க சிறு குறு விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் உடன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். சிறு, குறு விவசாயிகளுக்கு உரம் மற்றும் இதர இடுபொருட்கள் வழங்குவதற்கு ஏற்கெனவே நிரந்தர அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.